

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 358 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 22 – புதன்கிழமை 07 ஆகஸ்டு 2024 – மதுரை 28 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 358 : Thiruvalluvar Year - 2055 - Aadi 22 - Wednesday 07 August 2024 - Madurai 28 + 8 Pages ₹ 5.00


# இன்று கலைஞரின் 6-ஆவது ஆண்டு நினைவு நாள்!



முதலமைச்சரும், தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (6.8.2024) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் 5–வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் ம. விஜயபாஸ்கர், மு. தீனபந்து, (ஓய்வு), சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் கு. சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ், மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி எஸ். சுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உயிர் காக்கும் காப்பீட்டுத் திட்டங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியா?

## நாடாளுமன்ற வளாகத்தில் 'இந்தியா' கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்!

### ராகுல்காந்தி – டி.ஆர்.பாலு பங்கேற்பு!

புதுடெல்லி, ஆக. 7 -

உயிர் காக்கும் மருத்துவக் காப்பீடு திட்டங்களுக்கான ஜி.எஸ்.டி., வரியை ரத்து செய்ய வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு திட்டங்களுக்கு 18 சதவிகித ஜி.எஸ்.டி., வரி விதிக்கப்படும் என்று கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய, உயிர்காக்கும் மருத்துவக் காப்பீட்டு திட்டங்களுக்கு ஜி.எஸ்.டி வரி விதிப்பதற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

பொதுமக்கள் தங்களது குடும்பத்தை பாதுகாப்பதற்கு உதவும் காப்பீட்டு திட்டங்கள் மீது வரி விதிப்பது நியாயமல்ல என்று அனைத்து தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், காப்பீட்டு திட்டங்களுக்கான ஜி.எஸ்.டி., வரியை ரத்து செய்யக் கோரி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பிக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவார், மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா, மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அப்போது ஒன்றிய அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

மருத்துவ காப்பீட்டு திட்டங்களுக்கான ஜி.எஸ்.டி., வரியை ரத்து செய்யாவிட்டால் போராட்டம் தீவிரமடையும் என்று இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

## தமிழ்நாடெங்கும் அமைதிப் பேரணி – சென்னையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

**சென்னை, ஆக. 7 -**

**உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6–ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று அமைதிப் பேரணி நடைபெறுகிறது.**



இதுகுறித்து சென்னை கிழக்கு, வடக்கு, வடகிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", இன்று (ஆகஸ்ட் – 7, புதன்கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதில், தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் – முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு – சென்னை தென்மேற்கு - தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கியுள்ளோம்

# முன்மாதிரியாக தமிழ்நாடு!

## மாநில திட்டக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 7 -**

**தமிழ்நாட்டை இந்தியாவிலேயே தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கியுள்ளோம் என்றும், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்றும் மாநில திட்டக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சரும், தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (6.8.2024) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் ஐந்தாவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள், மாநில திட்டக் குழுவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அதில் நான்காவது திட்டக் குழு கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகளின்படியும், வழிகாட்டுதலின்படியும் மேற்கொள்ளப்பட்ட பணிகளான, புதுமைப் பெண் திட்டத்தின் தாக்கம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் அரசு தொடக்க பள்ளி மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள தாக்கம், எண்ணும் எழுத்தும் திட்டச் செயலாக்கத்தின் மதிப்பீடு போன்ற ஆய்வு முடிவுகள் குறித்தும் விவரித்தார்.

மேலும் மாநில திட்டக் குழுவால் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டம், வளமிகு வட்டாரங்கள் திட்டம், தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரிய பணிகள் பற்றியும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் பற்றியும் விரிவாக விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட ஆவணப் படத்தினை பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்களின் சிறப்புரையில் மக்களின் கல்வி, மருத்துவம், சுகாதாரம், சத்துணவு மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் மாநிலத் திட்டக் குழு துரிதமாக செயல்பட்டு அரசுக்கு ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுக்கவும், பரிந்துரைக்கவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

மூன்றாவது ஆண்டைத் தொடர்ந்து நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள கழக அரசு, மாநில திட்டக் குழுவும் நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

நான்காவது ஆண்டில் நடைபெறும் முதல் கூட்டம் என்பதால் திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் அவர்களுக்கும், உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முக்கிய வழிகாட்டியாக திட்டக் குழுவினர்!**

ஆட்சிச் சக்கரத்தை இயக்குபவர்களாக நாங்கள் இருந்தாலும், அதற்கு வழிகாட்டுபவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். நாங்கள் செல்லும் பாதையைத் தீர்மானிப்பவர்களாக மட்டுமல்லாமல், அதில் உள்ள நிறைகுறைகளை எடுத்துச் சொல்பவர்களாகவும் நீங்கள் இருக்கிறீர்கள். அந்த வகையில் எனக்கும், இந்த அமைச்சரவைக்கும், ஆட்சிக்கும் மிக மிக முக்கியமான வழிகாட்டிகளாக நீங்கள் அமைந்துள்ளீர்கள்.

பேராசிரியர் ஜெயரஞ்சன் உள்ளிட்ட நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு துறையிலும் பல்லாண்டுகால அனுபவம் கொண்டவர்கள். தங்களது அனுபவங்களையும், சிந்தனைகளையும் எங்களுக்கு தொடர்ந்து எடுத்துரைத்து வருகிறீர்கள்.

கடந்த மார்ச் மாதம் என்னைச் சந்தித்த துணைத் தலைவர் ஜெயரஞ்சன் அவர்கள் துறை சார்ந்த 16 அறிக்கைகளை அளித்தார்.

தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு திட்டமும் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயனுள்ள திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அந்த அறிக்கை மூலமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இந்த அறிக்கையைதான், எங்களுக்கு தரப்படும் மார்க் ஷீட்டாக நான் நினைக்கிறேன்.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலமாக மாணவர்கள் மட்டுமல்ல, கல்வித் துறையில் அடைந்துள்ள வளர்ச்சி என்ன?

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் சிறப்பிதழ்!**

**8 பக்கம் இணைப்பு**

